எம்.ஜி.ஆர். சிலை கோபுரக் குடமுழுக்கு



காரைக்குடி அருகேயுள்ள சங்கரபதிகோட்டையில் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். சிலை கோபுரக் குடமுழுக்கில் பங்கேற்ற சிவகங்கை தொகுதி முன்னாள் எம்.பி.யும், அதிமுக மாவட்ட செயலருமான பி.ஆர். செந்தில்நாதன், தவெக கட்சியினர், வி.ஏ.ஓ. சங்க நிறுவனர் இரா. போசு உள்ளிட்டோர்.

காரைக்குடி, ஆக. 28: சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகேயுள்ள அமராவதிபுதூர் சங்கரபதிக்கோட்டையில் தமிழ்நாடு ஓய்வு பெற்ற வி.ஏ.ஓ. சங்கம் சார்பில் நிறுவப்பட்ட மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் சிலை கோபுரக் குடமுழுக்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் குடமுழுக்கு வைதீக முறைப்படி மந்திரங்கள் ஓத கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டது. விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வி.ஏ.ஓ சங்க நிறுவனர் இரா. போசு வரவேற்றார்.

விழாவில் அதிமுக மாவட்டச் செயலரும், முன்னாள் எம்.பி.யுமான பி.ஆர்.செந்தில்நாதன், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், கனிமவளத் துறை அமைச்சருமான டி.கே.பிரபுவின் தந்தையுமான துரைகருணாநிதி, தேவகோட்டை நகர்மன்றத் தலைவர் கா.சுந்தரலிங்கம், துணைத் தலைவர் ரமேஷ், நகர அதிமுக செயலர் எஸ்.வி. ராமச்சந்திரன், வி.ஏ.ஓ. சங்கப் பொறுப்பாளர்கள் க.துரைராசு, ஆர்.எம்.ரங்கசாமி, கே.பெருமாள், ரெ.காசிநாதன், வடிவேலு, பட்டாபிராமன், எஸ்.பி.ராமு, கடலூர் மாவட்டம், நரையூர் பன்னீர் செல்வம், திருப்பத்தூர் அறிவுத்திருக்கோவில் சுப்பிரமணியன், முகம்மது ரபீக் , கார்மேகம், சோலை, கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குடிநீர் கோரி காலிக் குடங்களுடன் பெண்கள் நூதனப் போராட்டம்

கமுதி, ஆக. 28: கடலாடி அருகே குடிநீர் கோரி பெண்கள் காலிக் குடங்களுடன் ஒப்பாரி வைத்து வெள்ளிக்கிழமை நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம், கடலாடியை அடுத்துள்ள பொதிகுளம் ஊராட்சிக்கு உள்பட்ட யாதவர் குடியிருப்பில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக யாதவர் குடியிருப்பு பகுதியை மட்டும் தவிர்த்து, பொதிகுளம் ஊராட்சிக்கு உள்பட்ட மீத முள்ள 5 கிராமங்களுக்கு மட்டும் காவிரி கூட்டுக் குடிநீர், கரூர் கூட்டுக் குடிநீர், ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் குழாய் மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.



பொதிகுளம் ஊராட்சி, யாதவர் குடியிருப்புப் பகுதியில் குடிநீர் விநியோகிக்கக் கோரி, காலிக் குடங்களுடன் ஒப்பாரி வைத்து நூதனப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள்.

யாதவர் குடியிருப்பில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தண்ணீரின்றி காட்சிப் பொருளாக உள்ளது. இதனால், பொதுமக்கள் தனியாரிடம் ஒரு குடம் ரூ.15-க்கு விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்தும் நிலை உள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கடந்த 5 ஆண்டுகளாக அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் இது வரை நடவடிக்கையும் இல்லை.

இந்த நிலையில், யாதவர் குடியிருப்பு பெண்கள் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி முன்பாக தள்ளுவண்டி, காலிக் குடங்களுடன் அமர்ந்து ஒப்பாரி வைத்து நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட நிர்வாகம் தலையிட்டு குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவில்லையெனில், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை கடலாடி ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளிடம் ஒப்படைத்து ஊரை காலி செய்ய திட்டமிட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் நெசவாளர்கள் தர்னா

ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக. 28: ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நெசவாளர் சங்கம் முன் இலவச சேலை உற்பத்திக்கு நூல் வழங்காததைக் கண்டித்து, நெசவாளர் முன்னேற்ற தொழிலாளர்கள் சங்கத்தினர் வியாழக்கிழமை மாலை தர்னாவில் ஈடுபட்டனர்.

இதற்கு சங்கத் தலைவர் குத்தாலிங்கம் தலைமை வகித்தார். சங்கத்தின் சட்ட ஆலோசகர் வழக்குரைஞர் பால்ராஜ் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். அப்போது, நெசவாளர்களுக்கு தொடர்ந்து தரமான நூல் வழங்கி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். புதிய ரக சேலை உற்பத்திக்கு முந்தைய செலவுகளை அரசை ஏற்று, உரிய ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும். சங்க உறுப்பினர்களை அவதூறாக பேசிய கூட்டுறவு சங்க மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கைத்தறி உதவி இயக்குநர் அறிவித்த நிவாரண தொகையை உடனே வழங்க வேண்டும்.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நடைபெறும் முறைகேடுகள் மீது விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நெசவாளர்கள் தர்னாவில் ஈடுபட்டனர்.

நத்தம்பட்டி சுங்கச்சாவடியில் கட்டணம் வசூல்: தனியார் பேருந்துகளில் கட்டணம் உயர்வு

ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக. 28: மதுரை-கொல்லம் நான்கு வழிச்சாலையில் நத்தம்பட்டி சுங்கச் சாவடியில் கட்டணம் வசூல் காரணமாக, தனியார் பேருந்தில் ரூ.5 கட்டணம் உயர்த்தப்பட்டதால் பயணிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த நான்கு வழிச்சாலை திட்டத்தில் முதல்கட்டமாக, மதுரை மாவட்டம், திருமங்கலம் முதல் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் வரை 71.6 கி.மீ. தொலைவுக்கு ரூ.1,318 கோடியில் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி கடந்த 2023, மார்ச் மாதம் தொடங்கியது.

இதில் திருமங்கலம்-வடுகபட்டி (36 கி.மீ.), வடுகபட்டி-ராஜபாளையம் (35.6 கி.மீ.) இரு பிரிவுகளாகப் பிரித்து பணிகள் நடைபெற்றது.

இதில் வடுகப்பட்டி-ராஜபாளையம் இடையே சாலை அமைக்கும் பணிகள் முழுமையாக முடிந்ததையடுத்து, நத்தம்பட்டி சுங்கச் சாவடியில் கடந்த ஜூன் 15-ஆம் தேதி முதல் சுங்கக் கட்டணம் வசூல் தொடங்கியது. ஏற்கெனவே, ராஜபாளையத்திலிருந்து மதுரை செல்ல 5 சுங்கச் சாவடிகள் உள்ள நிலையில், நத்தம்பட்டி சுங்கச் சாவடியில் கட்டணம் வசூல் தொடங்கியதால் வாடகை கார்கள், சரக்கு வாகனங்கள், தனியார் பேருந்துகளுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டது.

இதனால், சுங்கக் கட்டண வசூலை நிறுத்தக்கோரி, வாடகை வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றது.

இந்த நிலையில், சுங்கச்சாவடி வழியாகச் செல்லும் சில தனியார் பேருந்துகளில் பயணக் கட்டணம் ரூ.5 உயர்த்தப்பட்டுள்ளது. இதனிடையே, பிற பேருந்துகளிலும் கட்டணம் உயரும் நிலை உள்ளதால் பயணிகள் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

சத்துணவு, அங்கன்வாடி ஓய்வூதியர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

சாத்தூர், ஆக. 28: விருதுநகரில் சத்துணவு, அங்கன்வாடி ஓய்வூதியர்கள் சங்கம் சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் சரஸ்வதி தலைமை வகித்தார். இதில் ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும்.

இதைசட்டப்பேரவைக்கூட்டத் தொடரில் அறிவிக்க வேண்டும். விலைவாசி உயர்வுக்கு ஏற்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். மருத்துவக் காப்பீடு வழங்க வேண்டும். ஓய்வூதியர் நலவாரியம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

இந்தப் ஆர்ப்பாட்டத்தில் சத்துணவு, அங்கன்வாடி ஓய்வூதியர்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கையில் செவிலியர் கல்லூரி: 14 ஆண்டு கால கோரிக்கை நிறைவேறுமா?

நமது நிருபர்

சிவகங்கை, ஆக. 28: சிவகங்கையிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரியில் செவிலியர் கல்லூரி உள்பட துணை மருத்துவப் படிப்புகள் தொடங்கப்பட வேண்டுமென்ற 14 ஆண்டுகால கோரிக்கை நிறைவேறுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்தது.

கடந்த திமுக ஆட்சியில் சிவகங்கை தொகுதியில் அதிமுகவைச் சேர்ந்தவர் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தபோது, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் செவிலியர் கல்லூரி தொடங்க வேண்டுமென 5 ஆண்டுகளாக தொடர்ந்து சட்டப்பேரவையில் வலியுறுத்தி வந்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு தவெக ஆட்சி அமைந்தது. சிவகங்கை மாவட்டத்திலுள்ள 4 சட்டப்பேரவைத் தொகுதிகளிலுமே தவெக வெற்றி பெற்றது. இதில் காரைக்குடி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் டி.கே.பிரபு அமைச்சராகப் பதவி ஏற்றார். இந்த நிலையில், சிவகங்கை சட்டப்பேரவை உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் சட்டப்பேரவையில் நடைபெற்ற மருத்துவத் துறை மானியக் கோரிக்கையின் போது, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் செவிலியர் கல்லூரி அமைக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ், தமிழகத்தில் கடந்த 2014-ஆம் ஆண்டுக்குப் பிறகு செவிலியர் கல்லூரிகள் எதுவும் தொடங்கப்படாத நிலையில், தற்போது முதல்வரின் வழிகாட்டுதலின்பேரில் புதிதாக 7 அரசு செவிலியர் கல்லூரிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த 7 புதிய கல்லூரிகளும் அமையும் இடங்கள் ஓரளவுக்கு முடிவாகிவிட்டன.



சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முகப்புத் தோற்றம்.

எனினும், உறுப்பினரின் கோரிக்கை முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும். வாய்ப்பிருந்தால் சிவகங்கையையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் விளக்கமளித்தார். இது சிவகங்கை தொகுதி மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

இதுகுறித்து மருத்துவர்கள் கூறியதாவது:

சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 250-க்கும் மேற்பட்ட செவிலியர்கள் இருந்த போதிலும், நோயாளிகளைக் கவனிப்பதில் சிரமம் உள்ளது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியர் பற்றாக்குறை ஏற்படும் போது, செவிலியர் கல்லூரி மாணவர்கள் மூலம் வார்டுகளில் நோயாளிகளைக் கவனிக்க முடியும்.

19 வகையான துணை மருத்துவப் படிப்புகள் உள்ளன. தற்போது, பிஎஸ்சி (ரேடியோதெரபி), பிஎஸ்சி (இமேஜிங் டெக்னாலஜி) ஆய்வக தொழில் நுட்பநர், அறுவைச் சிகிச்சை அரங்கு நுட்பநர், மயக்கவியல் நுட்பநர், நுண்கதிர் நுட்பநர் ஆகிய பட்டயப் படிப்புகள் மட்டுமே சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ளன என்றனர்.

இதுகுறித்து சிவகங்கையைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ப.மருது, வி.மதி ஆகியோர் கூறியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் அரசு செவிலியர் கல்லூரிகள் இல்லை. சிவகங்கை அருகே பூவந்தியில் கிராமப்புற சுகாதார செவிலியர்கள் பயிற்சி மையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. சிவகங்கையில் 2012- இல் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கிய போதே பிஎஸ்சி அல்லது டிப்ளமோ நர்சிங் கல்லூரி தொடங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரி தொடங்கி 14 ஆண்டுகளாகியும் செவிலியர் கல்லூரி தொடங்கப்பட வில்லை. இதுவரை இழுபறி நீடித்து வருகிறது. இந்த நிலையில், தமிழக முதல்வர் விஜய், 7 புதிய செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும் என சட்டப்பேரவையில் அறிவித்தார். இதில் ஒரு கல்லூரியை சிவகங்கையில் தொடங்க வேண்டுமென சிவகங்கை சட்டப்பேரவை உறுப்பினர் வலியுறுத்தினார்.

கடந்த ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்படாத இந்தக் கோரிக்கையை தமிழக முதல்வர் நிறைவேற்ற முன் வரவேண்டும் என்றனர் அவர்கள்.

தமிழ்நாடு கிராம வங்கியின் 704-ஆவது கிளை திறப்பு

சிவகங்கை, ஆக. 28: சிவகங்கை அருகேயுள்ள இடையமேலூர் கிராமத்தில் தமிழ்நாடு கிராம வங்கியின் 704-ஆவது கிளை வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த புதிய கிளையை திறந்துவைத்து மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு கிராம வங்கி, அனைத்து வகை கடன்களையும் வழங்கும் வங்கியாக இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் தமிழ்நாடு கிராம வங்கி ரூ. 622.79 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது. இதில் வாராக்கடன் 0.59 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

இந்த வங்கியில் தொழில் கடன், கல்விக் கடன், வீட்டுமனைக் கடன், தனிநபர் கடன், வாகனக் கடன் போன்ற அனைத்து வகையான கடன்களும் வழங்கப்படுகின்றன.



இடையமேலூர் கிராமத்தில் தமிழ்நாடு கிராம வங்கியின் புதிய கிளையை திறந்துவைத்து மகளிர் சுயஉதவிக்குழுவுக்கு கடனுதவி வழங்கிய மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ்.

மேலும், தமிழ்நாடு கிராம வங்கியில் அரசு மானியம் பெறும் வங்கிக் கடன்களும் வழங்கப்படுகின்றன. இந்தச் சேவைகளை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

இந்த நிகழ்வின்போது குறு,சிறு, நடுத்தர தொழில்கள், சுயஉதவிக் குழுக்கள் கடன்கள் உள்பட 6 பயனாளிகளுக்கு ரூ.8 லட்சம் மதிப்பிலான கடன் உதவிக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மேலும்,பொதுமக்களுக்கான வங்கி சேமிப்பு கணக்கையும் தொடங்கி வைத்தார். இதில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ். பிரவீன் குமார், தமிழ்நாடு கிராம வங்கியின் மண்டல மேலாளர் கே.நித்தியானந்த், நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் ஜி.எஸ்.அனிஷ் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர், 3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை – 625 014, போன் : 0452 – 2602200, மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ஒருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார்(கள்) / அடமானதார்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தார்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் /அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. M/s.ஸ்ரீ கணேஷ் மேட்ச் இன்டஸ்ட்ரீஸ் (கடன்தார்), பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு.M.கணேசன், எண்.5/180, சின்னமூப்பன்பட்டி கிராமம், விருதுநகர் – 626 001. 2. திரு.M.கணேசன் (அடமானதாரர்), த/பெ.லேட் திரு.மனோகரன், கதவு எண்.68/1, S.M.பெண்பாடசாலை வீதி, விருதுநகர் – 626 001. 3. திருமதி.G.தேவி (உத்தரவாதமளித்தவர்), க/பெ.திரு.M.கணேசன், கதவு எண்.68/1, S.M.பெண்பாடசாலை வீதி, விருதுநகர் – 626 001.	விருதுநகர் மாவட்டம், விருதுநகர் பதிவு மாவட்டம், விருதுநகர் இணை எண்.2 சார் பதிவு மாவட்டம், விருதுநகர் தாலுகா, சின்னமூப்பன்பட்டி கிராமம், சிவஞானபுரம் கிராம ஊராட்சி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், சர்வே எண்.97/1Dயில் உள்ள 0.25.5 எக்டர் நிலத்தின் மத்தியிலுள்ள 12,209 சென்ட் அல்லது 5318.4375 சதுர அடி நிலமும், அதில் கட்டப்பட்டுள்ளதும் பழைய கதவு எண்.5/141 மற்றும் புதிய கதவு எண்.5/180 கொண்டதுமான வீடும் சேர்ந்த சொத்தின் எல்லைகள் : வடக்கே : M.கணேசனுக்குச் சொந்தமான நிலம், கிழக்கே : கிராம நத்தம் நிலம், மாரியாளின் நிலம் மற்றும் மற்றும் பேவனக்கொடிக்குச் சொந்தமான நிலம், தெற்கே : பேவனக்கொடிக்குச் சொந்தமான நிலம், மேற்கே : கிழமேல் 20 அடி அகல தென்வடல் நீளி பொது வழித்தடம். சொத்து லேட் திரு.மனோகரன் மகன் திரு.M.கணேசன் பெயரிலுள்ளது. வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL. GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக்குறிப்பிற்காக) – அட்சரேகை : 9.605395 மற்றும் தீர்க்கரேகை : 77.939865 Property ID in BAANKNET Portal : BARB602802260002	மொத்த நிலுவைத் தொகை 28.08.2026 தேதியன்று, ரூ.22,63,748/- (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து எழுநூற்று நாற்பத்து எட்டு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	17.09.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.14,20,000/- (ரூபாய் பதினான்கு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) 2. ரூ.1,42,000/-(ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து இரண்டாயிரம் மட்டும்) 3. ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)	கொள்நிலை (Physical) சுவாதீனம்	15.09.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்-ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 0452-2602200, மொபைல் : 9790247824; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 28.08.2026 / இடம் : மதுரை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா